வர வேணும் மயில்மீதிலே
வந்தருள் புரிய வேணுமே (முருகா)

தரவேணும் நின் சேவையே
தமியேனுக்காக மனம் இரங்கி அருள் புரிய

புரமெரித்தவன் அன்று புன்னகை செய்ததினால்
கரம் பன்னிரெண்டு கொண்டு சரவணத்தில் உதித்தாய்
நெறி தவறிய ஸூரன் சிரமறுத்தெரிந்தோனே
ஹரி மருகா திரு கரி முகன் ஸோதரனே